Monday, November 02, 2009
4:43 PM


ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 6 இதழ் : 1 நவம்பர் 2009






சுதேச ஊழியர் சாட்சி

## சகோ. பாகா கட்டாரா

குஜராத்

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். என்னுடைய பெயர் பாகா கட்டாரா. நான் குஜராத் மாநிலத்தில் உள்ள தாகோத் மாவட்டத்திலுள்ள பாவ்கா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான், மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் தேவனுக்கென்று ஊழியம் செய்து வருகின்றேன். நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்தவன். மேலும் எல்லாவிதமான பூஜைகளையும் செய்வேன். ஆனால் எனது மனதிலும் ஆத்துமாவிலும், சரீரத்திலும் நிம்மதியில்லாதவனாக வாழ்ந்து வந்தேன். மேலும் எனது மகன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு சரீரப்பிரகாரமாக வேதனையுற்று வாழ்ந்து வந்தான். இவன் அசுத்த ஆவியால் பாதிக்கப்பட்டுள்ளதை நாங்கள் அறியாதிருந்தோம்.

இந்த சூழ்நிலையில் சன்னுபாய் என்ற ஒரு சகோதரர் எங்கள் ஊரில் வாழ்ந்து வருபவர். இவர் ஷாலோம் சுதேச ஊழியர் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர். இவர் ஒரு நாள் என்னையும் அருகிலுள்ள கிராம ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு எனக்கு ஒரு புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டது. அதை நான் தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தேன். பின்னர் அந்த கிராமத்தில் நடைபெறும் ஞாயிறு ஆராதனைக்கு எனது மகனை அழைத்துச் சென்றேன். அங்கு நான் விசுவாசத்துடன் அவனுக்காக ஜெபம் செய்தபோது தேவன் அவனை அசுத்த ஆவியிருந்து விடுவித்து, சரீரத்தில் பூரண சுகத்தைத் தந்தார். தேவனுக்கே மகிமை! இந்த அற்புதத்தைத் தொடர்ந்து நாங்கள் முடும்பமாக இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோம். எங்கள் குடும்பத்தில் தேவன் சமாதானத்தைத் தந்துள்ளார்.

அதன்பின் தேவன் இருளில் இருக்கின்ற எனது சொந்த ஜனங்களைக் குறித்த பாரத்தை எனக்குத் தந்தார். நான் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்று, ஊழியம் செய்ய எனது வாழ்வை அர்ப்பணித்தேன். அதன்பின் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குறுகிய கால வேதாகம பயிற்சி எடுத்து வேத அறிவை பெற்றுக்கொண்டேன். நான் இப்பொழுது தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டுவதையே இலட்சியமாகக் கொண்டு தேவனுக்கென்று ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : Christ Church , Secunderabad.

# உங்கள் சகோதரனிடமிருந்து....



ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள்.

நவம்பர் மாதத்தை காணச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! கடந்த 10 மாதங்கள் நம்மை கண்மணிபோல் காத்து, ஊழியப்பாதையிலும், நம் தனிப்பட்ட குடும்ப வாழ்விலும் நாம் கையிட்டு செய்யும் சகல காரியங்களையும் தேவன் தாமே ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை!

கடந்த அக்டோபர் மாதத்தில் 4.10.09 ஞாயிறு மற்றும் 11.10.09 ஞாயிறு குஜராத் மற்றும் மத்தியபிரதேசத்தில் அனைத்து சபைகளிலும் Shalom Mission Sunday உற்சாகமாக ஸ்தோத்திரத்துடன் கொண்டாட தேவன் கிருபை தந்தார். இவ்வருடம் இரண்டு மாநிலத்தில் மட்டுமே ரூ.10 இலட்சங்கள் காணிக்கை கிடைக்கப்பெற்றுள்ளோம். தேவனுக்கே மகிமை!

தொடர்ந்து இம்மாதம் முழுவதும் இராஜஸ்தான் மாநிலத்தில் 6 இடங்களில் 215 சுதேச ஊழியர் குடும்பங்களுக்கும் மூப்பர்களுக்கான சிறப்பு முகாம்களை நடத்த தேவன் கிருபை தந்தார். அதுபோல் இராஜஸ்தானில் கோய்க்க, கும்புரா வட்டாரத்தில் உள்ள சுமார் 900 வாலிபர்களுக்கான (ஆண்கள், பெண்கள்) சிறப்பு முகாம்கள் நடத்த தேவன் கிருபை தந்தார்.

குஜராத்திலுள்ள ஆனந்த் பட்டினத்தில் நம்வர் 3ம் தேதி முதல் 6–ம் தேதி வரை நடைபெற உள்ள Shalom Sevak Family Conrfence–க்காக ஜெபிக்க மறவாதீர்கள். தேவனுடைய மகிமையான ஆசீர்வாதம், அபிஷேக வல்லமை இந்த முகாமில் இறங்கவும் தேவன் தேவதாசர்களை பயன்படுத்தவும், முழு பீல் மக்கள் இரட்சிக்கப்பட ஊழியர்களுக்கு தேவன் ஆத்தும பாரத்தையும், தரிசனத்தைத் தரவும், தேவைகள் சந்திக்கப்படவும், *இயேசு விடுவிக்கிறார்* ஊழியத்தின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்படவும் தேவனுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

தொடர்ந்து 20 கிராமங்களில் கட்டப்படும் ஆலயக்கட்டுமான பணிகள் தடைகள்



இன்றி ஆசீர்வதிக்கப்பட, Shalom Church Network-க்கான முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட தேவ ஞானம் மற்றும் அதற்கான வழிகளை தேவன் தருவதற்காக ஜெபியுங்கள்.

தூத்துக்குடி தலைமை அலுவலம் மற்றும் தாகோத் பணித்தள அலுவலகம், Compassion Project, Shalom Hostels, Shalom School மற்றும் அனைத்து பணிகளுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் யாவருக்காக நாங்களும் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம்.

நீங்கள் நவம்பர் மாத ஆதாவுத் தொகையை அனுப்பும் போது கிறிஸ்துமஸ் வெகுமதி காணிக்கைகளை சேர்த்து அனுப்பினால் ஊழியர்களுக்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் வெகுமதிகளை துரிதமாகக் கொடுக்க மிகவும் உதவியாக இருக்கும்.

"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்". (மத் 28 : 20)

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

**_NET TRANSFER_ மூலமாக காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, **Internet** உதவியோடு **NET TRANSFER** மூலமாக காணிக்கை அனுப்பிய பின்பு உடனடியாக எங்களுக்கு காணிக்கை அனுப்பிய அனைத்து விபரங்களையும் ஈ–மெயில் மூலமாகவோ, எஸ்.எம்.எஸ். மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்த மிக அன்பாயக் கேட்கிறோம். நீங்கள் தெரிவிக்கத் தவறினால் காணிக்கை அனுப்பியது யார் என்பது தெரியாமல்கூட போக வாய்ப்புள்ளது. ஆகவே தயவு கூர்ந்து தகவல்களைத் தெரிவிக்க அன்பாய் கேட்கிறோம். இது எங்களுடைய கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவும், உங்களுக்கு ரசீது மற்றும் நன்றிக் கடிதம் உடனடியாக அனுப்பவும் ஏதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**email : info@shalommission.in, Cell : 9345675468**

# நமக்கு அதிகாரங்களை தருபவர் இயேசு

சிறப்புச் செய்தி : சகோ. V. தேவதாஸ்

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!

நம்முடைய இரட்சகராகிய இயேசு உயிர்த்தெழுந்தபின்பு பரலோகத்திற்கு செல்லும் முன்பாக தம்முடைய சீஷர்களைப் பார்த்து வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றார். நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலும் சகல அதிகாரங்கள் உண்டு. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். வேதம் சொல்லுகிறது. அதிகாரமும் பயங்கரமும் அவரிடத்தில் இருக்கிறது; அவர் தமது உன்னதமான ஸ்தலங்களில் சமாதானத்தை உண்டாக்குகிறார். (யோபு 25 : 2) ஆண்டவராகிய இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கும், தம்முடைய ஊழியர்களுக்கும் அந்த அதிகாரத்தைத் தருகிறார். அவைகளை நாம் சற்று வேதத்தின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

***1. தேவனுடைய பிள்ளைகள் ஆகும்படி அதிகாரம்***

**"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்".** (யோவா 1 : 12) இப்வாறு கூறுகிறது. நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசம் கொண்டு அவரை ஏற்றுக்கொள்ளும்போது பரலோகத்தின் புத்திரராய் மாறுகிறோம். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறப்பதாலோ, ஒழுங்காக ஆலயத்திற்கு செல்வதாலோ அல்ல. இயேசு கிறிஸ்துவை தேவ குமாரன் என்று விசுவாசித்து அவரை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்ளும்போது தான் இந்த அதிகாரத்தை கொடுக்கிறார். உலகத்தில் எல்லா அதிகாரங்களை விட நாம் தேவனுடைய பிள்ளைகள் என்கிற அதிகாரத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்கு தருகிறார். பிசாசின் இராஜ்யத்திலிருந்து தேவனுடைய இராஜ்யத்தின் புத்திரராய் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

***2. பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்***

மத்தேயு 9–ம் அதிகாரத்தில் வாசிக்கும்போது இயேசுவினிடத்தில் திமிர்வாதக்காரனை கொண்டு வந்தார்கள். திமிர்வாதக்காரனை நோக்கி உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது



என்றார். வேதபாரகரில் சிலர் எப்படி பாவத்தை மன்னிக்க முடியும் என்று பேசினார்கள். ஆனால் இயேசு அவர்களை நோக்கி உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: **"நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப்போ என்றார்".** உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான். (மத் 9 : 5–7) பாவங்களை மன்னிப்பதற்கு இயேசுவுக்கு அதிகாரம் உண்டு. அவர் ஒருபோதும் பாவியை தள்ளிவிடார். பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கிறவர். தேவ பிள்ளைகளாகிய நாம் அவரிடத்தில் வரும்போது நம்முடைய தவறுகளை மன்னிக்கிறவராக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவினிடத்தில் தயவும், கிருபையும் திரளான மன்னிப்பும் உண்டு. நம்முடைய பாவங்களை அறிக்கை செய்யும்போது கிழக்கிற்கும் மேற்கிற்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்குகிறார். (சங். 103) நமது பீல் ஆதிவாசி மக்கள் ஊழியத்தில் பயங்கரமான குடிகாரர், கொள்ளையர்கள், அசுத்த ஆவிகளின் பிடியில் கொடுமையான பாவங்களை செய்பவர்கள் இயேசுவண்டை வந்தபோது புது வாழ்வு பெற்று வருகிறார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு தம்முடைய சீஷர்களிடத்தில் வந்தபோது **"எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கும் மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்".** (யோவான் 20 : 23)

***3. நோய்களை நீக்கி சுகமாக்கும் அதிகாரம்***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 3 1/2 வருடம் ஊழியம் செய்தபோது திரளான வியாதிப்பட்டவர்களை சுகமாக்கினார். அவர் அவளிடத்தில் குனிந்துநின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று, உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலப்பல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். **"அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார்".** (லூக் 39 : 40)

இயேசு அவர்களை நோக்கி : **"என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்து வருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார்."** (லூக் 5 : 17)–ம் வசனமும் இவ்வாறு கூறுகிறது. பிணியாளிகளை குணமாக்கத்தக்கதாக கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு அந்த அதிகாரத்தை கொடுக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, **"சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்".** (லூக் 9 :1) தம்முடைய சீஷர்களுக்கு வியாதிகளை குணமாக்க வல்லமையும் அதிகாரமும் கொடுத்து அனுப்பினார். அதுபோலவே அன்று அப்போஸ்தலர்களுக்கும் இன்று தேவனுடைய ஊழியர்களுக்கும் நோய்களை சுகமாக்கும் அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்திருக்கிறார்.

மாற்கு 16 : 17,18–ம் வசனங்களை வாசிக்கும்போது விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். ஒரு முறை குஜராத்தில் கங்கேலா என்ற கிராமத்திலுள்ள சபைக்கு சென்றபோது ரத்தனாபாய் மேடா என்ற சகோதரர் சாட்சி கொடுத்தார். அவருக்கு வயது 35. அவரை கொடிய விஷமுள்ள பிராணி கடித்துவிட்டதால் கால் அழுக ஆரம்பித்தது. மந்திரவாதிகளிடம் சென்றும் பயனற்றுப்போய்விட்டது. அவர் வீட்டிற்கு அருகிலிருந்த நமது ஷாலோம் விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி சாட்சி கூறி எண்ணெய் பூசி ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம். உடனடியாக அவருடைய காலில் அழுகிய பகுதி முழுவதும் காய்ந்துவிட்டது. தேவன் அவர் வேலைக்கு திரும்ப கிருபை செய்தார். இப்பொழுது சபையில் சாட்சியாக விளங்குகிறார்.

*4. பிசாசுகளை துரத்தும் அதிகாரம்*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் ஊழியம் செய்தபோது அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு இருந்தவர்களுக்கு அசுத்த ஆவிகளை துரத்தி விடுதலைக் கொடுத்தார். பலவிதமான வியாதிகளினாலும் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார். **"அந்த பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை".** (மாற் 1 : 34)



எல்லாரும் ஆச்சரியப்பட்டு இது என்ன? இத்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? **"இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்".** (மாற் 1 : 27) அதை இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கும் தம்மை விசுவாசிக்கிற தேவ பிள்ளைகளுக்கும் தம்முடைய அதிகாரத்தையும் தருகிறார். **"வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்".** (மாற்கு 3 ; 15) பின்பு விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளை பேசுவார்கள். (மாற் 16 : 17) இன்றைக்கும் நமது ஷாலோம் ஊழியத்தில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியிலே ஆளுகை செய்துகொண்டு இருந்த அசுத்த ஆவிகளை விடுவிக்க நமது சுதேச ஊழியர்களுக்கு பிசாசின் மேல் ஒரு அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். பல்லாயிர ஆதிவாசி குடும்பங்கள் பிசாசின் மற்றும் அசுத்த ஆவியின் பிடியிலிருந்தும் விடுபட்டு தேவனை ஆராதித்து வருகிறார்கள். அசுத்த ஆவியின் கிரியைகள் பில்லிசூனியங்களை கண்டு பயந்து வந்த பீல் ஆதிவாசிகள் விசுவாசிகளாய் மாறின பின்பு சிறிதளவும் அவைகளை கண்டு பயப்படமாட்டார்கள். மாறாக அசுத்த ஆவிகளும் பில்லிசூனியங்களும் இவர்களை பார்த்து நடுங்குகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வானத்திலும், பூமியிலும் சகல ஆதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லிவிட்டு நமக்கு மிகப் பெரிய பொறுப்பை கொடுக்கிறார். அது என்னவென்றால் புறப்பட்டுச் செல்லுங்கள். சகல ஜாதிகளை சீஷராக்குங்கள். ஞானஸ்நானம் கொடுங்கள். உபதேசத்தில் நிலைத்திருக்கச் செய்யுங்கள் என்றார். ஆகவே ஒவ்வொரு விசுவாசிகளையும் ஒவ்வொரு சபைகளையும் இம்மாபெரும் கட்டளைக்கு கீழ்ப்படிந்து சுவிசேஷ பணியிலே நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். உலகத்தின் கடைசி சுவிசேஷம் அறிவிக்கப்படும்வரை அயராது உழைக்க வேண்டும். தேவன் தம்முடைய ராஜ்ஜியத்தை கட்டும்படி இயேசு கிறிஸ்து அந்த அதிகாரத்தை நமக்குத் தந்திருக்கிறார். அதே வேளையில் உயிர்த்தெழுந்த இயேசு இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே இருக்கிறேன் என்று வாக்குபண்ணியிருக்கிறார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு பெலன்கொண்டு இயேசுவின் இரண்டாம் வருகைக்கு தம்முடைய தலைமுறை ஜனங்களை ஆயத்தப்படுத்துவோம். அல்லேலூயா !

# ஜெபக் குறிப்புகள்



**பீல் ஆதிவாசி ஜனங்கள்:**

ஒரு கோடி பீல் ஆதிவாசி ஜனங்களும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்....

**கிராம ஆலயங்கள்:**

ஷாலோம் பணித்தளங்களில் 20 கிராமங்களில் ஆலயக் கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன இதற்காக ஜெபியுங்கள். 20 ஆலயங்களும் எந்த தடையும், பிரச்சனையுமின்றி கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

**சுதேச ஊழியர்கள்:**

தேவன் நமக்குத் தந்துள்ள 435 பீல் சுதேச ஊழியர்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள்.. சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காக ஜெபியுங்கள். சுதேச ஊழியர்களின் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்கள் தேவனால் பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்.

**சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம்:**

நவம்பர் முதல் வாரத்தில் குஜாராத், மேம்நாபாத்தில் நடைபெற உள்ள ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாமிற்காகவும் ஊழியர்களின் பிரயாணங்களுக்காகவும் தங்கும் வசதிக்காவும், உணவு வசதிக்காகவும், தேவைகள் சந்திக்கப்படும்படியாகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

**மழைக்காக:**

நமது பணித்தளங்களில் தேவன் ஆசீர்வாதமான மழையைக் கட்டளையிடவும், அதன் மூலம் பீல் ஆதிவாசி ஜனங்கள் நல்ல விளைச்சலைப் பெற்று தேவனைத் துதிக்கவும் ஜெபியுங்கள். மேலும் தமிழகத்திலும் நல்ல ஆசீர்வாதமான மழையை தேவன் தர ஜெபியுங்கள்.

**கிறிஸ்துமஸ் தேவைகள்:**

நமது பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் அவர்கள் பிள்ளைகள் மற்றும் விடுதியில் படித்து வரும் நம்முடைய ஆதிவாசி பிள்ளைகளுக்கு ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும் கிறிஸ்துமஸ் அன்பளிப்புகளுக்கான தேவை ரூ. 7 லட்சங்கள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**வேதாகமத்திட்டம்:**

பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு வழங்கிவரும் வேதாகமங்களுக்கான தேவைகள் முழுமையாக சந்திக்கப்பட ஜெபியுங்கள்...

**பணித்தள அலுவலகம் & தலைமை அலுவலகம் :**

பணித்தள மற்றும் தலைமை அலுவலகங்களில் நடைபெறுகின்ற அனைத்து ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், ஊழியம் செய்யும் தேவபிள்ளைகளை தேவன் ஆசீர்வதிகக்வும், நல்ல பாதுகாவலை தேவன் தரவும், மேலும் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.



# வாழ்விலிருந்து வாழ்வுக்கு....

- நான் நூறாவது முறை வேதாகமத்தை வாசிக்கிற இந்த வேளையில் முதலாவது முறை வாசித்ததைக் காட்டிலும் இனிமையாக இருக்கிறது. –சார்லஸ் ஸ்பர்ஜன்
- சாத்தான் சீறுகிறான். ஆனால் அவன் தோல்வியடைவான். கர்த்தர் வாசலை திறப்பாரானால் யார் அதை மூடுவான். –ரேனியஸ்
- அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. –தாவீது
- நாம் இரண்டாம் வருகையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால், பாதி உலகத்திற்கு இன்னும் முதல் வருகையைப் பற்றிக்கூட தெரியவில்லையே. –ஆஸ்வால்டு ஜே.ஸ்மித்
- பண ஆசையை மேற்கொள்வதற்கு ஒரே வழி, கொடுத்துப் பழகுவதுதான். – ஜான் தாமஸ்
- தேவனுடைய பார்வையில் உலகத்தின் செல்வங்களை எல்லாம் கொட்டிக்கொடுத்தாலும், அவை ஓர் ஆத்துமாவின் விலைக்கு ஈடாக முடியாது. –மேய்ப்பர் சுந்தரம்
- என்றுமே குறையாத காடுகளில் விசுவாச பாதையில் செல்லும், அன்பினை எனக்குத் தாரும் –ஏமி கார்மிக்கேல்
- தேவனை அறிந்திருக்கிறவர்கள் தான் வீர சாகசம் புரிவோர். தேவனை புகழ்வோர் அல்ல. –ரேவண்ட் ஹில்
- ஏழைகளின் நன்மைக்காக என் கைகளைத் துண்டித்து, என் கண்களைப் பிடுங்கி துன்புறுத்தினாலும், அதை நான் பாக்கியமாக கருதுகிறேன். –எட்மண்ட்
- ஆண்டவரே! என் ஆவியை ஏற்றுக்கொள்ளும். என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் –ரிட்லி
- நீர் செய்வது அனைத்திலும் உன்னை நினைப்பதற்கு மாறாக இறைவனையே நினைத்துக்கொள். – வின்சென்ட் ஃபெர்
- தேசத்தை விட்டு குடிபோவது என்பது, கர்த்தரிடத்தில் குடிபுகுவது ஆகும். – வேதா
- ஒன்றுமில்லாததிலிருந்து உருவாக்குகிறவர்தான் தேவன். ஆகவே தான் மனிதரைக் கொண்டு அவரால் ஒன்றும் உருவாக்க முடிவதில்லை. –மார்ட்டின் லூத்தர்
- ஆண்டவரே நான் உம்மண்டையில் சேர்வதையே இப்பூமியில் பெரும் ஆவலாக கொள்கிறேன். – சாரான் பிளவர் ஆடம்ஸ்

- ☼ ஆண்டவரே ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும். இல்லையேல் நான் சாகிறேன். – ஜான் நாக்ஸ்
- ☼ கடவுளின் அழைப்பிற்காக காத்திருக்கிறேன். கிறிஸ்து சிந்தின இரத்தத்தால் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நான் அவரிடம் அச்சமின்றி செல்வேன். –ஐசக் வாட்ஸ்
- ☼ கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மீதான அன்பில் விழ வேண்டும். அப்போது அவர்கள் தாமாகவே அருட்பணிக்கு முன்வருவார்கள். –ஹெலன் ரோஸ்வியர்.
- ☼ உறுதியால் அல்ல, விடா முயற்சியாயாலேயே உயர்ந்த காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.
- ☼ முற்றிலும் உடைபட்ட மனிதர்களையே தேவன் தம்முடைய மகிமைக்காக பயன்படுத்த இயலும்.
- ☼ நற்செய்தியை பிரசங்கிக்காத மனிதன், நற்சாட்சியாக வாழமுடியாது.
- ☼ வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்தில் உள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது.
- ☼ உணவினால் உடலை வளர்ப்பதுபோல, ஜெபத்தினால் உங்கள் ஐக்கியத்தை வளருங்கள்.
- ☼ இயேசு கிறிஸ்வுக்காக தேசத்தை சுதந்தரிப்போர், தேவனுடைய ராஜ்யத்திலும் பங்கு பெற்றவராவர்.
- ☼ மரம் தனக்காக பழுப்பதில்லை. ஆறு தனக்காக ஓடுவதில்லை. மிஷனெரிகள் தமக்காக வாழ்வதில்லை.
- ☼ எத்தனை இடையூறுகள் வந்தாலும், எடுத்த காரியத்தை உறுதியாக செய்து முடிப்பதே சிறந்த லட்சியம்.
- ☼ மாபெரும் தேவனோடு பழகிவிட்டவன் என்றுமே மானிடரின் பரிந்து பேசுதலுக்கு காத்திருக்கமாட்டான்.
- ☼ கிறிஸ்துவின் ராஜ்ஜியம் விரிவடைவதற்கு பல வழிகள் நம்முன்னே இருக்கின்றன. செயல்படுவது நம் கைகளிலே.
- ☼ கிறிஸ்தவ வெற்றி வாழ்க்கைக்கு, தரிசனமும் தாகமும் இன்றியமையாத இரண்டு அம்சங்கள்.
- ☼ உலகிற்கு நற்செய்தி சொல்ல வேண்டுமானால், அதை உன் குடும்பத்திலிருந்து ஆரம்பி.
- ☼ இயேசு இல்லையென்றால் நம் வாழ்க்கை பூஜ்ஜியம். இயேசு நமக்குள் இருந்தால் நாம் தான் ராஜ்ஜியம்.

தொகுப்பு : மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்



✞ அறிமுகப்படுத்துகிறோம்...

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 18 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக நீண்ட நாட்கள் ஜெபத்திற்குப் பின் மூத்த தலைவர்களின் ஆலோசனையின் பேரில், ஆவியானவரின் வழிநடத்துதலின்படி **Shalom Charity Mission** – என்ற இயக்கத்தை பதிவு செய்ய தேவன் கிருபை தந்துள்ளார். **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளை கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். **Shalom Charity Mission - Founder & Managing Trustee** ஆக **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். Dr. Mrs. Prema Christopher, (Palayamkottai), Mr. Winston Balasingh (Tuticorin), Mr. Jacob (Chennai) ஆகிய மூவரும் **Trustee** களாக பொறுப்பேற்றுள்ளார்கள். Sharing Love Mission Board முழுமையாக இதை ஆதரித்து, செயல்பட அனுமதித்துள்ளது. ஆகவே Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறேன். விரைவில் நமக்கு இந்த சமூக சேவை பணிக்கான 80G கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். மேலும் பிரதிநிதிகளுக்கு ரசீது புத்தகங்கள் அனுப்பப்படுகிறது.

மேலும் இது குறித்து விபரங்களை அறிய எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். சகோதரி வஹிதா தேவதாஸ், Cell : 09327445468, சகோ. சாம் குணசீலன் Cell : 9345675468

வங்கி கணக்கு எண் : **105010100096779**

**SHALOM CHARITY MISSION - Axis Bank - Tuticorin Branch**

## பீல் சுதேச ஊழியர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும்

# கிறிஸ்துமஸ் வெகுமதி

அன்பார்ந்த ஷாலோம் ஊழிய ஆதரவாளர்களே!

ஷாலோம் மிஷனெரி பணியில் தேவன் உங்களையும் இணைத்து பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்தி வருகிறபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் மனமகிழ்ச்சியின் நாட்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும். அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுப்பது வழக்கம். மேலும் நம்முடைய பள்ளி. விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ. மாணவிகளுக்கும். சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள். வெகுமதிகள் கொடுக்கலாம் என ஜெபித்துத் தீர்மானித்துள்ளோம்.

ஆகவே வருகிற மாதத்தில் நமக்கு இதற்காக நிதி உதவி சுமார் ரூ. 7 லட்சங்கள் தேவைப்படுகிறது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு ரூ. 1000/- அல்லது அதற்கு மேலாகவோ. ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு ரூ. 500/- கிறிஸ்துமஸ் வெகுமதிக்காகக் கொடுத்து உதவ மிக அன்பாய் கேட்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை நவம்பர் மாதத்திற்குள்ளேயே அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும். ஆதிவாசி பிள்ளைகளுக்கும் வெகுமதிகளை துரிதமாகக் கொடுக்க உதவியாக இருக்கும்.

கிறிஸ்துமஸ் வெகுமதியை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.

இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடுங்கள். தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



*May God Bless You*



கடந்த ஆண்டு ஆதிவாசி சிறுவர்களுக்கு நம் மூலம் கொடுக்கப்பட்ட கிறிஸ்துமஸ் வெகுமதிகள்



## பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு

# வேதாகமத் திட்டம்

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 12 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் "சிறப்பு விருது" கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக இன்னும் 5000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் தேவைப்படுகிறது. ஆகவே இந்தத் திட்டத்திற்காக ஒரு வேதாகமம் ரூ. 80 வீதம் 5000 வேதாகமங்களுக்கு நிதி உதவித் தேவைப்படுகிறது. இதில் 3250 வேதாகமங்களுக்கு நிதி உதவி கிடைக்கப்பெற்றுள்ளோம். மீதி 1750 வேதாகமங்களுக்கு நிதி உதவி கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம். அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத்த வேதாகமங்கள்




வழங்கப்பட்ட 2000 வேதாகமங்கள் (ஹிந்தி – 1000, குஜராத்தி – 1000)




வேதாகமங்களுக்கான சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது.




ஊழியர்களிடம் வேதாகமங்கள் கொடுக்கப்படுகிறது.

## நன்றி கூறுகிறோம்....

கடந்த நாட்களில் நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு பரிசுத்த வேதாகமங்கள் வழங்குவதற்கான தேவைகளைத் தெரிவித்திருந்தோம். முதல் கட்டமாக இந்திய வேதாகமச் சங்கம், (அஹமதாபாத், குஜராத்) கிளை மூலமாக 2000 ஹிந்தி & குஜராத்தி வேதாகமங்கள் வாங்கி நம்முடைய பீல் விசுவாசிகளுக்கு ஊழியர்கள் மூலமாக வழங்கப்பட்டது. இதுவரை 3250 வேதாகமங்களுக்கு காணிக்கை கிடைக்கப்பெற்றுள்ளோம். இன்னும் 1750 வேதாகமங்களுக்கான காணிக்கை கிடைக்கப்பெற ஜெபியுங்கள். இந்தத் திட்டத்திற்காக காணிக்கைக் கொடுத்த ஒவ்வொரு தேவபிள்ளைகளையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக!



## பீல் ஆதிவாசி விசுவாசிகள் மிஷன் ஞாயிறு அன்று உற்சாகமாக காணிக்கை படைக்கிறார்கள்.

### மிஷன் ஞாயிறு குஜராத் - 04.10.2009



கங்கேலா கிராம சபை



ராசரடா கிராம சபை



ஜெரி கிராம சபை



தெல்சர் கிராம சபை




ஹிரோலா கிராம சபை



மல்வாசி கிராம சபை



உஸ்வானியா கிராம சபை

### மிஷன் ஞாயிறு மத்தியப்பிரதேசம் - 11.10.2009



பாடல்வா கிராம சபை



விசல்பூர் கிராம சபை



ருண்கேடா கிராம சபை



வாவடி கிராம சபை




முண்டத் கிராம சபை



டிக்கிடி கிராம சபை



அந்தர்வேலியா கிராம சபை

கொடைகானல் Pr. ராஜன் ஆபிரகாம் (U.S.A.) அவர்களின்

## பணித்தள வருகை




மத்தியப்பிரதேசம் ஜாரா தாபர் கிராம ஆலய பிரதிஷ்டை



மூப்பர் கூடுகை, ம.பி. காளகேத் கிராமம்



ஆதிவாசி சிறுவர்களுடன் (CDP) (அந்தர்வேலியா, ம.பி)




உற்சாகமான கலாச்சார வரவேற்புடன் பேடவ் கிராம ஆலயத்தில் நடைபெற்ற ஊழியர் கூடுகை




குஜராத், ஹிரோலா கிராம ஆலயத்திலுள்ள நமது CDP பிள்ளைகளுடன்



## பாஸ்டர் ராஜன் ஆபிரகாம் அவர்களின் பணித்தள வருகை

தேவனுடைய பெரிதான கிருபையினால், கொடைக்கானலைச் சேர்ந்த ***Pr.*** **ராஜன் ஆபிரகாம் *(U.S.A.)*** அவர்கள் தனது மனைவி மற்றும் மகளுடன் நமது ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடவும், தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றவும் வந்திருந்தார்கள். 15.10.2009 அன்று குஜராத், தாகோத் வந்த அவர்களுடன் **சகோ. தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோரும் இணைந்து ராஜஸ்தானிலுள்ள நமது பணித்தளங்களைப் பார்வையிட்டார்கள். இதில் கும்புரா மற்றும் பேடவ் கிராமங்களில் ஊழியர் மற்றும் மூப்பர் கூட்டங்களை ***Pr.*** ராஜன் ஆபிரகாம் அவர்கள் நடத்தினார்கள். 16.10.2009 அன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள நமது பணித்தளங்களைப் பார்வையிட்டார்கள். இதில் ஹிரோலா மற்றும் அந்தர்வேலியா கிராமங்களிலுள்ள ***Compassion Project*** –மூலமாக படித்துவரும் சிறுவர்களை பார்வையிட்டார்கள். அதன்பின் காளகேத் கிராமத்தில் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். பின்பு ஜாரா தாபர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தை பிரதிஷ்டை செய்து தங்களது பணித்தள வருகையை இனிதே நிறைவேற்றினார்கள்.

---

## *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காக அனுப்பப்படுகிறது.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2009) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/– ஆயுள் சந்தா : ரூ.600/–**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **சாரு மேய்டா** |
| தகப்பனார் பெயர் | : | துபலியா மேப்டா |
| தாயார் பெயர் | : | நிர்மலா மேப்டா |
| பிறந்த நாள் | : | 25.02.2002 |
| படிக்கும் வகுப்பு | : | U.K.G. |
| சொந்த ஊரின் பெயர் | : | நஹர்புரா |
| மாவட்டம் | : | ஜாபுவா |
| மாநிலம் | : | மத்தியப்பிரதேசம் |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:-**

சாரு மேப்டாவின் தகப்பனார் இயேசுவை அறிவதற்கு முன்பு பிசாசின் பிடியினில் சிக்கி, குடிப்பது, சண்டை போடுவது போன்ற தீய பழக்க வழக்கங்களைச் செய்து வந்தவர். இவருடைய குடும்பத்தினர் அனைவரும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்தச் சூழ்நிலையில் அநேக புற இன தேவதைகளை தேடிச்சென்று வணங்கி வந்தார். ஆனாலும் விடுதலை கிடைக்கவில்லை. பின்பு ஒரு நாள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்பட்டு, ஆலயத்திற்குச் சென்றார். அங்கு சுதேச ஊழியர் இவருக்காகவும் இவரது குடும்பத்திற்காகவும் ஜெபித்தபோது, தேவன் அனைத்து சாபக்கட்டுகளையும் உடைத்தார். இந்த நாளிலிருந்து குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். இவர் தொடர்ந்து வேதம் வாசித்து ஜெபித்து வரவே தேவன் இவருடைய உள்ளத்தில் ஊழியம் செய்ய வாஞ்சையைக் கொடுத்தார். ஆகையால் இவர் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** நன்றாக படிப்பாள்.விளையாட்டில் ஆர்வமுண்டு, நடனமாடுவாள், நன்றாக பாடுவாள். ஹிந்தி, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மிகவும் ஆர்வம் உண்டு. படித்தபின் கலக்டராக வேண்டும் என்ற வாஞ்சை உண்டு.

**ஜெபியுங்கள்:-** நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் :** **Mahimaiyin Yesu Marathavar Ministries,** Arumuganeri.

**நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.**
**உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.**



## தேவனைத் துதிக்கிறோம்...





ஆறுமுகநேரி, **மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியத்தின்** சார்பில் 10 ஆதிவாசி சிறுவர்களைத் தாங்க முன்வந்த Bro. D. **கிறிஸ்டின் ஜெனிஸ்டின்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். மேலும் ஆறுமுகநேரி, மடத்துவிளையில் 10.10.2009 அன்று நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத கூடுகையில் இந்த 10 ஆதிவாசி சிறுவர்களைத் தாங்குவதற்கான முதல் மாத காணிக்கையை **சகோ. குரூஸ் மாசில்லாமணி** (இயேசுவே மீட்பர் ஊழியங்கள், கடையனோடை) அவர்கள் மூலமாக **சகோ. சாம் குணசீலன்** (மேலாளர், அன்பு பகிர்வு இயக்கம்) அவர்களிடம் வழங்கப்பட்டது. Bro. D. **கிறிஸ்டின் ஜெனிஸ்டின்** அவர்களையும் அவர்கள் செய்யும் ஊழியங்களையும் கர்த்தர்தாமே ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவாராக!

---

கடைமலைக்குன்று **பள்ளத்தாக்கின் லீலி ஊழியத்தின்** சார்பில் நமது ஷாலோம் ஆதிவாசி விசுவாசிகளுக்கு **(இலவசமாக)** 250 வேதாகமங்கள் (ரூ. 20,000/–) வாங்கிக் கொடுக்க முன்வந்த **Bro.D. பிரபாகர்தாஸ்** ஐயா, (தலைவர், பள்ளத்தாக்கின் லீலி) அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். கடைமலைக்குன்றில் 10.10.2009 அன்று நடைபெற்ற 27வது ஆண்டு விழாவில் 250 வேதாகமங்களுக்கான காணிக்கையை **Rev. எடிசன் ஜாண்லாஸ்** B.D., (தலைமைப்போதகர், கடைமலைக்குன்று சேகரம்) அவர்கள் மூலமாக **சகோ. செல்வதுரை** (ஷாலோம் முன்னேற்றப்பணியாளர், மார்த்தாண்டம்) அவர்களிடம் வழங்கப்பட்டது. **Bro.D. பிரபாகர்தாஸ்** ஐயா, அவர்களையும், மேலும் உடன் ஊழியர்களையும் அவர்கள் செய்யும் ஊழியங்களையும் கர்த்தர்தாமே ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவாராக!



# பணித்தள சாட்சிகள்

## தேவனுக்கே மகிமை

**சகோ. ராம்சிங் V. டாமோர்** — **லிம்பாகேடி (குஜராத்)**

நாரா பாய் என்ற சகோதரர் ஒரு வருடமாக புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார். மந்திரவாதிகளிடம் சென்றும் சரியாகவில்லை. இறுதியாக நமது ஆலயத்திற்கு வந்து இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் புற்றுநோயிலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**சகோ. பட்சு கராசியா** — **சசியா (குஜராத்)**

பூர்ஜிபாய் என்ற சகோதரருக்கு கண் பார்வை தெரியமால் இருந்தது. சுகமளிக்கும் கூட்டத்தில் விசுவாசிகள் எண்ணெய் பூசி ஜெபித்தார்கள். தேவன் கண் பார்வை கொடுத்தார். தேவனைத் துதியுங்கள்.

**சகோ. மன்னு டாமோர்** — **அப்லாட் (குஜராத்)**

மணிபேன் என்ற சகோதரியின் மகள் பிறவியிலிருந்தே பேச முடியாத ஊமையாக இருந்தாள். இவர்கள் வேதனையுடன் சுகமளிக்கும் கூட்டத்தில் பங்குபெற்றார்கள். இந்த மகளுக்காக விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் இந்த மகள் வாயைத் திறந்து பேச கிருபை செய்தார்.

**சகோ. ராமு ஹத்தில்லா** — **ரேகம்புரா (குஜராத்)**

மான்சிங் என்ற சகோரனின் மகனுக்கு இழுப்பு வியாதி இருந்தது. மருத்துவமனைக்கு சென்று ஒரு லட்சம் செலவு செய்தும் சரியாகவில்லை. 3 மாதத்தில் மகன் இறந்து விடுவான் என்று டாக்டர் கூறினார்கள். அவனுக்கு தலையிலும் புற்றுநோய் இருந்தது. குடும்பத்திலுள்ள அனைவரும் மிகவும் வேதனையுடன் ஆலயத்திற்கு வந்து விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார்.

**சகோ. ராஜேஷ் மாவி** — **குல்தோரா (குஜராத்)**

சுனிதா பேன் என்ற சகோதரிக்கு கடந்த 7 மாதங்களாக மனநிலை சரியில்லாமல் போனது. இதனால் கண் தெரியாமலும் காது கேட்காமலும் இருந்தது. சுகமளிக்கும் கூட்டத்தில் வந்து ஜெபித்தபோது தேவன் நல்ல சுகத்தைக் கட்டளையிட்டார்.

**சகோ. பாபு டாமோர்** — **நண்டுகன் (குஜராத்)**

கூப்டு என்ற சகோதரனுக்கு ஒன்றரை ஆண்டுகளாக காலில் பெரிய கட்டி இருந்தது. சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக அந்தக் கட்டி மறையும்படி கிருபை செய்தார்.



**சகோ. கல்லு டின்டோ** — **டாக்கா (இராஜஸ்தான்)**

ராஜேஷ்பாய் என்ற சகோதருக்கு குஷ்டரோகம் இருந்தது. பல மருத்துவமனைகளுக்குச் சென்றும் சரியாகவில்லை. பிறகு சுகமளிக்கும் கூட்டத்திற்கு வந்த போது அவர்கள் விசுவாசத்தோடு ஜெபித்து கொண்டே இருந்தார்கள். தேவன் அற்புதமாக குஷ்டரோகத்தை சுகமாக்கினார்.

**சகோ. கமலேஷ் மச்சார்** — **ராய்பூரா (இராஜஸ்தான்)**

சம்சு பாய்க்கு பிசாசு பிடித்திருந்தது. 7 வருடமாக கை, கால்கள் செயல்படாமல் இருந்தது. எந்த உணர்ச்சியும் உடலில் இல்லாமல் இருந்தது. மந்திரவாதிகளிடம் சென்றும் சுகம் கிடைக்கவில்லை. பிறகு ஆலயத்திற்கு வந்து ஊழியர் இவர்களுக்காக ஊக்கமாக ஜெபித்தார். ஜெபித்த போது தேவன் பெரிய விடுதலையைக் கட்டளையிட்டார்.

**சகோ. ரமேஷ் சந்திரகட்டாரா** — **அன்டேஸ்வர் (இராஜஸ்தான்)**

மங்களி பேனுன் என்ற சகோதரியின் தொண்டையில் 2 கட்டிகள் இருந்தது. மருந்துகள் சாப்பிட்ட போது சரியாகவில்லை. சபைக்கு சென்றால் இயேசு சுவாமி அற்புதமாக நோய்களை சுகமாக்குகிறார் என்று கேள்விப்பட்டு சபைக்கு வந்தார்கள். சபையில் விசுவாசத்துடன் ஜெபித்த போது 2 கட்டிகளும் உடைந்து நோய் குணமானது.

**சகோ. ஹிராலால் கட்டாரா** — **பட்லா (இராஜஸ்தான்)**

ஹல்குபேன் என்ற சகோதரி வாய்பேச முடியாமல் இருந்தாள். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சரியாகவில்லை. இறுதியாக சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துகொண்டு விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் வாய் பேச கிருபை செய்தார்.

**சகோ. ஹிர்ஜி பாண்டா** — **பாடலா (இராஜஸ்தான்)**

கலாபேன் என்ற சகோதரி பிசாசின் பிடியினால் நடக்கமுடியாமல் அதிக கஷ்டப்பட்டார். 2 பேர் தூக்கிக்கொண்டு ஆலயத்திற்கு வந்தார்கள். ஜெப எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. சாந்திலால் அஹாரி** — **புட்டாலா (இராஜஸ்தான்)**

ஜேசோதா பேன் என்ற சகோதரிக்கு பயங்கரமான வயிற்று வலி இருந்தது. மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். டாக்டர் கர்ப்பப்பையின் அருகே கட்டி உள்ளது என்று கூறினார். மருந்து மாத்திரைகள் சாப்பிட்டும் குணமாகவில்லை. இறுதியாக சபைக்கு வந்து எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. பாபுலால் ரனா** — **வாகக்னேர் (இராஜஸ்தான்)**

கஞ்ஜிபாய் என்ற சகோதரர் கால் நடக்க முடியாமல் முடவனாக இருந்தார். சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபோது 2 கால்களையும் ஊன்றி எழுந்து நிற்க தேவன் பெலன் கொடுத்தார். இந்த சகோதரன் தற்போது நடக்கிறான். தேவன் பெரிய அற்புதத்தை செய்தார்.

**சகோ. ராமு டாமோர்** **கோபால்புரா (மத்தியப்பிரதேசம்)**

லிம்பா பேஹுடைய கணவருக்கு நெஞ்சில் வலி இருந்தது. மருத்தவமனைக்குச் சென்ற போது காச நோய் என்று கூறினார்கள். மந்திரவாதிகளிடம் கொண்டு சென்ற போது சரியாகவில்லை. சகோதரி மிகவும் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். ஊழியரிடம் வந்து இயேசுவின் நாமத்தைச் சொல்லி ஜெபித்தவுடன் தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. ஜாய்சிங் ஜாமேர்** **கட்வாலியா (மத்தியப்பிரதேசம்)**

சோபாராம் பாய், துக்காராம் பாய் இருவருக்கும் பிறந்ததிலிருந்தே மிகவும் குறைவான கண் பார்வைதான் இருந்தது. இவர்கள் புற மதத்தைச் சேர்ந்தவர்கள். இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களாக இருந்தார்கள். இதைக் கேட்டு நான் அங்கு போய் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவித்து, விசுவாசத்துடன் ஜெபித்தேன். தேவன் அவர்கள் இருவருக்கும் நன்றாகக் கண் பார்வை தெரியச் செய்தார். தேவனைத் துதியுங்கள்.

**சகோ. சர்தார் J. டாமோர்** **காளகேத் (மத்தியப்பிரதேசம்)**

அனதா பேன் என்ற சகோதரி 20 வருடமாக கூனியாக இருந்தார். சுகமளிக்கும் கூட்டத்தில் வந்து பங்கு பெற்ற போது விசுவாசத்தோடு ஜெபித்தார்கள். தேவன் நல்ல முறையில் அனிதா பேனை நிமிர்ந்து நடக்க உதவிச் செய்தார்.

**சகோ. ஜானா கேளாத்** **தேவ்தாமஹி (மத்தியப்பிரதேசம்)**

குடுபாய் என்ற சகோதரருக்கு பிறந்ததிலிருந்து வயிற்றில் ஒரு கட்டி இருந்தது. இதனால் அதிகமாக கஷ்டப்பட்டார்கள். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் நல்ல சுகத்தைக் கட்டளையிட்டார்.

**சகோ. ஹேம்சந்த் குடியா** **நகாடியா (மத்தியப்பிரதேசம்)**

விஜய் பாய்க்கு உடல் முழுவதும் கொப்பளமாக இருந்தது. 7வருடமாக அதிக கஷ்டப்பட்டார். ஆலயத்திற்கு வந்து ஊழியர் எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் நல்ல சுகத்தை கட்டளையிட்டார்.

**சகோ. வால்சிங் சாரேல்** **ஹக்வானி (மத்தியப்பிரதேசம்)**

சோமேஷ் பாய் என்ற சகோதரருக்கு மூட்டு வலி அதிகமாக இருந்தது. ஒரு வருடத்தில் 2 அல்லது 3 முறை அதிகமாக கஷ்டப்பட்டார். வலி தாங்க முடியாமல் அதிகமாக அழுவார். பிறகு சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்ற போது தேவன் அவர்களுக்கு பரிபூரண சுகத்தை கட்டளையிட்டார்.





## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

AXIS BANK
Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

ICICI Bank
I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

# ராபர்ட் மோரிசன்





1782ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள நார்த்தம்பர்லேண்டில் (Northumberland) எட்டு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் கடைசியாக பிறந்தார் இராபர்ட். இராபர்ட் 3 வயதாக இருக்கும்போது இக்குடும்பம் நியுகாஸல் (Newcastle) என்ற இடத்திற்குக் குடிபெயர்ந்து சென்றது. இவரது தந்தை காலணிகள் செய்வதற்கான மா அச்சுகளை உற்பத்தி செய்யும் கம்பெனி வைத்திருந்தார். அக்கம்பெனியில் சிறு வயதிலிருந்தே உதவி வந்தார் இராபர்ட் மோரிசன். தேவபக்தியுள்ள அவரது தந்தையின் மூலம் தனது ஓய்வு நேரத்தை வேதத்தைக் கற்பதில் செலவிட்டார்.

இராபர்ட் 12வயதாக இருக்கும்போது 119ஆம் சங்கீதம் (176 வசனங்கள்) முழுவதையும் ஒரு பிழை இல்லாமல் போதகர் முன்னிலையில் ஒப்புவித்தார். தனது 15ஆம் வயதில் உண்மையான மனமாற்றம் அடைந்து கிறிஸ்துவுக்குள் அனுதினமும் வளர ஆரம்பித்தார். இயேசுவைப் பற்றி அறியப்படாத வெளிநாட்டவர்களுக்கு சுவிசேஷம் சொல்ல வேண்டும் என்ற வாஞ்சை ஏற்பட்டது. தாயின் மரணத்திற்குப் பிறகு இங்கிலாந்து சென்று 2 வருடம் மிஷனெரிப் பயிற்சி பெற்றார். லண்டன் மிஷனெரி சங்கத்திற்கு விண்ணப்பித்தபோது இவரை மிஷனெரியாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் சிலர் "உன் வாலிப வாழ்வை ஏன் வீணாக்க வேண்டும்?" என்று சோர்வடையச் செய்தனர். எனினும் தனது ஊழிய அழைப்பில் மோரிசன் உறுதியாய் நின்றார். சீன மொழியை கற்க ஒரு வாய்ப்பை ஆண்டவர் தந்தார். 1807ஆம் ஆண்டு சரியான சக ஊழியர் கிடைக்காது போனதால் இவரை தனியாகவே சீன தேசத்திற்கு அனுப்ப தீர்மானம் எடுக்கப்பட்டது. இவர்தான் முதல் முதலாக சீன தேசத்திற்கு அனுப்பப்பட்ட சீர்திருத்த சபையின் முதல் மிஷனெரி (First Protestant Missionary In China) ஆவார்.

கிழக்கிந்திய கம்பெனி (East Indian Comany) இவருக்கு கப்பலில் பயணம் செய்யவும், சீன தேசத்தில் குடியிருக்கவும் அனுமதிதர மறுத்தது. மாநிலச் செயலாளரான ஜேம்ஸ் மாரிசனிடம் (James Morrison) ஒரு அறிமுகக் கடிதம் பெற்றுக்கொண்டு அமெரிக்கக் கப்பலில் சீன தேசத்திற்கு புறப்பட்டார். ஒரு மாதப் பிரயாணத்திற்குப் பிறகு 1807 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சீனாவிலுள்ள கேன்டன் (Canten) என்ற பகுதிக்கு வந்து சேர்ந்தார். அந்நாட்களில் கிழக்கிந்திய கம்பெனியர் சுவிசேஷம் சொல்லுவதற்கு முற்றிலும் தடை செய்து வியாபாரத்தில் மட்டும் கவனத்தை செலுத்தினர். எனவே மோரிசனுக்கு சீன மொழியைக் கற்பதுகூட அதிக ரகசியமாக செய்யப்பட வேண்டியதாயிற்று. சகஊழியர்கூட இல்லாதது அதிக தனிமையை உணர வைத்தது. வீட்டிலிருந்தும் கடிதத்தொடர்பே இல்லாதது அவரை அதிகம் சோர்வுறச் செய்தது.

சுவிசேஷத்தை வெளிப்படையாய் பிரசங்கிக்கக் கூடாது என்ற தடை கேன்டனில்



இருந்தபோதும், மோரிசன் தனது நேரத்தை வீணடிக்கவில்லை. இரண்டு ரோமன் கத்தோலிக்க நண்பர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் சீன மொழியைக் கற்றுக்கொள்ளச் சென்றபோது, உமக்கு எங்கள் மொழியைச் சொல்லித்தருவதால் எங்கள் உயிருக்கு ஆபத்து உண்டு. அதிகாரிகள் எங்களைக் கைது செய்து கொடுமைக்கு ஆளாக்குவதற்கு முன் நாங்களே எங்களை மாய்த்துக் கொள்ள எப்போதும் விஷம் வைத்து உள்ளோம் என்றனர். இவர்களிடம் ஜெபத்துடன் மொழியைக் கற்றுக்கொண்டு முதலில் சீன அகராதியை உண்டு பண்ணி ரகசியமாக வேதத்தையும் மொழி பெயர்க்கலானார். கேன்டன் வந்து 18 மாதத்தில் அகராதியை ஏற்படுத்திக் கொடுத்த மோரிசனை கிழக்கிந்தியக் கம்பெனியார் பாராட்டி அவருக்கு மொழி பெயர்ப்பாளர் என்ற பதவியைத் தந்து, மாத வருமானம் தரவும் முன்வந்தனர்.

அதன் பின் சீன தேசத்தில் வாழ்ந்து வந்த இங்கிலாந்து மருத்துவரின் மகளான மேரி மார்டேன் (Mary Martain) என்பவரை திருமணம் புரிந்தார். 1815ஆம் ஆண்டு தனது இரண்டு சிறு குழந்தைகளுடன் மேரி இங்கிலாந்து போக நேர்ந்தது. வேதனையுடன் அவர்களுக்கு பிரியாவிடை கொடுத்தனுப்பிய மோரிசன் தன்னுடைய முழு நேரத்தை ஊழியத்தில் செலவிட்டார். 1821ஆம் ஆண்டு மேரி சீனா வந்த போதிலும் சிறிது நாட்களிலே சுகவீனமடைந்து மரித்துப் போனார். 9வயது மகள் ரெபேக்காவும் ஏழு வயது மகன் ஜானும் மறுபடியும் இங்கிலாந்து தேசத்திற்குக் கல்விக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். குடும்ப வாழ்வில் பல கஷ்டங்களையும், மனவேதனையையும் அனுபவித்த மோரிசன் பிள்ளைகள் போன பிறகு தனிமையில் வேதத்தை மொழிபெயர்ப்பதில் முழு கவனத்தையும் செலுத்தினார்.

சுவிசேஷத்திற்கு சீனாவில் முதல் மிஷனெரியாக அவர் கருதப்பட்டாலும் பகிரங்கமாக சுவிசேஷம் சொல்ல முடியவில்லை. ஊழியத்தில் முதல் விசுவாசி, ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு ஏழாவது வருடமே கிடைத்தார். பிரிட்டிஷ் அதிகாரிகள் கவனத்தில் இல்லாத பகுதியில் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. 1815ஆம் ஆண்டு சீன மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து வெளியிட்டபோது கிழக்கிந்திய கம்பெனியர் மோரிசனை வேலை நீக்கம் செய்தனர். கிழக்கிந்திய கம்பெனியின் அச்சுறுத்தலும், சீனாவிலிருந்து ஒரு சில கிறிஸ்தவர்களின் எதிர்ப்பும் இவரது ஊழியத்திற்கு அதிகத் தடையாக இருந்தது. 25 ஆண்டுகள் அயராது பாடுபட்டு 1824ஆம் ஆண்டு வேதத்தை முழுவதும் சீன மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இங்கிலாந்து தேசத்திற்கு விடுமுறைக்குச் சென்று இரண்டு ஆண்டுகள் அங்குள்ள பல பகுதிகளில் சீன தேசத்தின் தேவையைப் பகிர்ந்து கொண்டு, அதன் மூலம் மிஷனெரியாக வர முன்வந்தவர்களுக்கு சீன மொழியைக் கற்றுக்கொடுத்தார். சீனப்பெண்கள் மத்தியில் கிறிஸ்து அறிவிக்கப்பட வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி தனது வீட்டிலே ஊழிய வாஞ்சையுள்ள பெண்களுக்குச் சிறப்பு வகுப்புகளை நடத்தினார். அநேகர் அந்த வகுப்பில் பயின்று சீனா வந்து கேன்டன் பகுதியில் தனது பணியைச் செய்தனர். கம்பெனி வேலை, ஊழியம் என்று அதிக வேலைப்பளுவினால் பெலன் இழந்து சுகவீனப்பட்டு குவாங்ஷு என்ற (Gunangzhou) என்ற இடத்தில் 1834ஆம் ஆண்டு 1ஆம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். சிலரை மட்டுமே கிறிஸ்துவுக்குள் வழிநடத்த முடிந்தபோதிலும் அழியாத பணியான வேதத்தை சீன மொழியில் மொழிபெயர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஷாலோம் ஊழியத்தின்
## E-mail & SMS சேவைகள்




இன்பர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

இந்த பரந்து விரிந்த பிரபஞ்சத்தில் விஞ்ஞான ரீதியான தொழில் நுட்ப வளர்ச்சி முக்கியமான இடத்தினை வகிக்கிறது என்பதில் எந்த ஒரு சந்தேகமுமில்லை. அந்த வகையில் இன்று உலகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பது மொபைல் போனாகும் (Mobile Phone). இந்த மொபைல் போனில் பயன்படுத்தப்படும் SMS (Short Message Service) என்ற சேவை தொலை தொடர்புத் துறையில் பெறும் பங்கை வகித்து வருகிறது. இந்த SMS (Short Message Service) சேவையை நாமும் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டும் பணியில் பயன்படுத்தலாம்.

இந்த SMS சேவையை ஷாலோம் ஊழியங்களில் அறிமுகப்படுத்துகிறோம். முதலாவதாக இதன் முலம்

1. ஜெபக்குறிப்புகள்.
2. வாக்குத்தத்த வசனங்கள்.
3. காணிக்கை பெற்றுக் கொண்டதின் விபரங்கள்.
4. பிறந்த நாள் / திருமண நாள் வாழ்த்துக்கள்.

போன்ற சேவைகளை இலவசமாக உங்களுக்கு வழங்க பிரயாசப்படுகிறோம். இந்த SMS சேவைகளை நாம் பயன்படுத்தும்போது நேரம் மற்றும் பணச் செலவுகளை மிச்சப்படுத்தலாம். மேற்கண்ட விபரங்களை நாங்கள் உங்களுக்கு SMS மூலமாக அனுப்புகிறோம் என்பதை தெரியப்படுத்துகிறோம்.

ஆகவே இந்தச் சேவைக்காக உங்ளுடைய மொபைல் போனின் எண்ணை எங்களுக்கு **9345675468** என்ற எண்ணுக்கு SMS மூலமாக அனுப்புங்கள்.

***எங்களது E-mail முகவரி & Website :***

**email : info@shalommission.in,**

**Website : www.shalommission.in**



## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- மாதந்தோறும் ரூ.1000/- கொடுத்து Shalom Mission Partner-ஆக முன் வரலாம்.
- மாதம் ரூ.500/- கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- மாதம் ரூ.400/- கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம். (ஒரு ஆண்டிற்கு ரூ. 4,800/–)
- ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம். (5550 வேதப்புத்தகங்கள் தேவை)
- அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

பாகிஸ்தானில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் போலீசாரை குறிவைத்து ஐந்து இடத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதில் குழந்தைகள் உட்பட 42பேர் பலியானர். 90 பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலினால் பாகிஸ்தான் முழுவதும் அதிர்ச்சியடைந்துள்ளது. மேலும் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

---

வளைகுடா நாடுகளை இணைக்கும் வகையில் ரெயில்பாதை ரூ. 3 லட்சம் கோடி செலவில் அமைக்கப்படுகிறது. இந்தத்திட்டம் பகரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் இடையே இந்த போக்குவரத்து அமைக்கப்படுகிறது. இந்தப் பாதையில் இரயில்போக்குவரத்து 2010 அல்லது 2010ம் ஆண்டிற்குள் துவக்கப்படும் என அறிவிக்கப்பட்டுளது. இதற்கான செலவுகளை 6 நாடுகளும் பகிர்ந்து கொள்கின்றன.

---

பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்து கொள்வதால் ஆண்டுதோறும் 70 ஆயிரம் பெண்கள் பலியாகின்றனர் என்று அமெரிக்காவில் உள்ள கட்மாச்சார் இன்ஸ்டிடியூட் தலைவர் ஷரோன் கேம்ப் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் கருக்கலைப்பு குறைந்துள்ளபோதிலும் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளின் எண்ணிக்கை குறையவில்லை. மேலும் எழை நாடுகளில் பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்புகளை 2 கோடி பெண்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

---

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் உலகக்கோப்பை கால்பந்தாட்டப் போட்டி தென் ஆப்பிரிக்காவில் 2010ம் ஆண்டு நடைபெற இருக்கிறது. இந்த உலகக்கோப்பைப் போட்டியில் கலந்து கொள்ள தென் ஆப்பிரிக்கக் கண்டத்துக்கான தகுதி ஆட்டத்தில் அர்ஜெண்டினா அணி வெற்றி பெற்று உலகக் கோப்பை கால்பந்தாட்ட போட்டியில் ஆடத் தகுதி பெற்றுள்ளது.

---

அமெரிக்க ராணுவம் கடந்த 2003ம் ஆண்டு முதல் ஈராக் மீது தாக்குதலை நடத்தியது. இந்த தாக்குதலை கிட்டதட்ட 6 ஆண்டுகள் நடந்தது. இதில் 2004ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டுவரையிலான் ஐந்து ஆண்டுகளில் 85 ஆயிரத்து 694 பேர் பலியாகியுள்ளதாகவும், 50 ஆயிரம் போர் காயம் அடைந்துள்ளதாகவும் ஈராக் அரசு தெரிவித்துள்ளது. இந்தப் போர் தொடங்கிய 2003ம் ஆண்டு காலகட்டத்தில் எத்தனை பேர் இறந்தார்கள் என்ற தகவல் ஈராக் அரசிடம் இல்லை.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
| --- | --- |
| **Sharing Love Mission**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | Bro. V. Devadass<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

email : info@shalommission.in, Website : www.shalommission.in




## கிராம ஆலயம் ஜாரா தாபர் மத்தியப்பிரதேசம்



மத்தியபிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டம், ஜாரா தாபர் கிராமத்தை சேர்ந்த சகோ. பகதூர் புரியா என்ற சகோதரரின் மனைவி கடும் இடுப்பு வலியின் நிமித்தமாக மிகுந்த அவதிப்பட்டாள். உடலை அசைக்கக் கூடாதபடிக்கு படுத்தபடுக்கையானாள். இந்நிலையில் 2002–ல் ஷாலோம் சுதேச ஊழியராகிய சகோ. கல்சிங் பூரியா அவர்களை சந்தித்து, அவரது மனைவிக்காக அதிக பாரத்தோடும், விசுவாசத்தோடும் ஜெபித்தபோது தேவன் அவளுக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார். உடனே அவர்கள் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு 2 வருடங்களாக குடும்பமாக இரட்சிக்கப்பட்டு விசுவாசிகளாக இருந்து வந்தார்கள். 2006–ல் தாகோத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் இவர் கலந்து கொண்டு ஜெபித்தபோது ஆவியானவர்தாமே வல்லமையாக அவரை அபிஷேகித்தார். இவருக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற பாரம் ஏற்படவே தன் வீட்டிலே ஆராதனை நடத்தி வந்தார். இந்த ஆராதனையில் 28 விசுவாசக் குடும்பங்கள் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வருகிறார்கள். பிறகு தன் சொந்த இடத்தை ஆலயம் கட்டுவதற்காகக் கொடுத்தார்.

கொடைக்கானலைச் சேர்ந்த Pr. ராஜன் ஆபிரகாம் அவர்கள் கொடுத்த நிதி உதவியினால் இந்த ஆலயம் கட்டப்பட்டு 19.10.2009 அன்று Pr. ராஜன் ஆபிரகாம் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

**ஜெபியுங்கள்...**

ஷாலோம் சுதேச ஊழியர்

# குடும்ப முகாம் – 2009

| நாள் | இடம் |
|---|---|
| நவம்பர் 4ம் தேதி முதல் 6ம் தேதி வரை | ஆனந்த், குஜராத் |

வல்லமையின் செய்தி

சகோ. **A. அப்பாத்துரை**

சகோ. **J. ஜெபக்குமார்**

சகோ. **S. சாம் ஜெபராஜ்**

இயேசு விடுவிக்கிறார் குழுவினர், நாலுமாவடி

போதகர் **மா. ஜான்ராஜ்** சிவகாசி

*ஜெபக்குறிப்புகள்:–*

- ஊழியர் கூட்டத்தில் தேவ வல்லமை வெளிப்படும்படியாக....
- ஒவ்வொரு ஊழியரும் அபிஷேகத்தாலும் தரிசனத்தாலும் நிரப்பப்பட....
- ஊழியர்களின் பிரயாணங்களுக்காகவும்....
- அனைத்து தடைகளும் தகர்க்கப்படவும், தெய்வீக பாதுகாப்பிற்காகவும்....
- தேவ ஊழியர்கள் அக்கினி ஜுவாலையாக பயன்படுத்தப்படவும்....
- கூட்ட ஒழுங்குகளுக்காக, இயற்கை சூழ்நிலைகளுக்காக....
- கூட்டங்களுக்கு தேவையான நிதியுதவி கிடைக்கப் பெறுவதற்காக ஜெபியுங்கள்....

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss